**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**OS – 134/2018**

நாள் 05.11.2024.

DW2 – ரவி
த/பெ – ரங்கசாமி கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 5th day of November 2024.)**

**குறுக்கு விசாரணை**

1. நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை எதுவும் வரவில்லை என்று சொன்னால் சரிதான். நான் 7–ம் பிரதிவாதி தமிழ்செல்வனின் தாய்மாமாவின் மகள் ஜோதியின் கணவர் என்றால் சரிதான். எனக்கும் ஜோதிக்கும் 1998 ல் திருமணம் நடந்தது. சென்னியப்ப கவுண்டரும், காளியப்ப கவுண்டரும் எந்த வருடத்தில் சொத்து வாங்கினார்கள் என்றால் தேதி தெரியாது 1980, 1981 வருடங்களில் வாங்யிருப்பார்கள்.

2. தாவா சொத்தில் உரிமை மற்றும் அனுபவத்தை பொறுத்து சாட்சியம் கூற எனக்கு அருகதை கிடையாது என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் குருவாயி தோட்டம் சர்வே எண்.190, 191 சொத்துக்களில் வாதி ரேவதிக்கு பாத்தியமுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் முன்பு அவருக்கு பாத்தியம் இருந்தது. சர்வே எண்.210 ல் சென்னியப்பன் மற்றும் காளியப்ப கவுண்டர் ஆகியோர் வாரிசுகள் எல்லோருக்கும் பாத்தியம் என்றால் சரிதான். அதேபோல் சர்வே எண்.194 சொத்தையும் அவர்கள் இருவரும் கூட்டாக கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். சர்வே எண்.210, 194 சொத்துக்கள் யார் யாருக்கு

பாத்தியப்பட்டது என்று எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றும் ஆனால் அதில் வாதி ரேவதியின் பெயரை சொல்லாமல் மறைத்து விட்டுள்ளோம் என்றால் சரிதான். ரேவதி தாவா சொத்துக்களை பொறுத்து எந்தவொரு விடுதலை ஆவணமும் யார் பெயருக்கும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

3. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூட்டு உரிமையாளர் அனைவரும் பங்குகளை மாற்றி விவசாயம் செய்து அனுபவித்து வருகிறார்கள் என்றும் அதை எந்த முறையில் யார் யார் எப்படி செய்து வருகிறார்கள் என்றால் அவர்கள் 2,3 ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் அனுபவத்தை மாற்றி விவசாயம் செய்து வருகிறார்கள். நான் சொல்லும் காளியப்ப கவுண்டர், சென்னியப்ப கவுண்டர், மற்றும் பெரியசாமி கவுண்டர் ஆகிய மூவரும் தாவா சொத்துக்களை 3 ஆக பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அவர்கள் மூவரும் எவ்வளவு விஸ்தீரணம் கொண்ட சொத்தை எவ்வாறு பிரித்துக் கொண்டார்கள் என்றால் எனக்கு நேரடியாக தெரியாது.

4. 7–ம் பிரதிவாதி தான் என்னை சாட்சி சொல்ல அழைத்து வந்தார் என்றால் சரிதான். காளியப்பன், 7–ம் பிரதிவாதி தமிழ்செல்வன், மோகனாம்பாள், கருப்பாயாள், கருப்புசாமி, சாந்தாமணி, வாதி ரேவதி உள்ளிட்ட எல்லோரும் சேர்ந்து தாவா சொத்தை சுப்பிரமணியம் என்பவருக்கு என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 மூலம் கிரையம் கொடுத்த விபரம் எனக்குத் தெரியாது. தாவா சொத்துக்களை வாய்மொழியாக வாதியும், பிரதிவாதிகளும் ஏற்கனவே வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வழக்கின் தரப்பினர்களுக்கு யார் யாருக்கு எவ்வளவு சொத்து பாத்தியம்

என்ற விபரம் எனக்குத் தெரியாது. 7–ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நான் பக்கத்து தோட்டத்துக்காரர். நான் தாவா சொத்தின் பக்கத்துத் தோட்டத்துக்காரர் என்பதை காட்ட அது சம்பந்தமான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து சாம்ராஜ்பாளையத்தில் உள்ளது. எனது ஊர் கஸ்தூரிபாளையம். எனக்கு இந்த வழக்கு பற்றி தெரியாமல் 7–ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> :** இல்லை

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/-C.Senthil Kumar**
**Subordinate Judge,**
**Avinashi.**